**ஸ்ரம வாசனா நிதியம் - 2023**
**------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரம வாசனா நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஸ்ரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரிவு 6(2) மற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 | பணிக்கொடை கொடுப்பனவினை கணக்கிடுதல், ஒதுக்குதல் மற்றும் நிதிக் கூற்றுக்களில் வெளியிடுதல் என்பன கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி மேற்கொள்ளப்படவில்லை. | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின்படி, ஸ்ரம வாசனா நிதியத்தினால் ஊழியர்களுக்கான பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. அங்கு பணிக்கொடையானது ஊழியரின் சேவைக்காலம் மற்றும் இறுதியாக பெற்ற சம்பளத்தில் அரைவாசி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அதற்கிணங்க, ஸ்ரம வாசனா நிதியத்தினால் 2019 ஆம் ஆண்டு முதல் ஊழியரின் சேவைக்காலத்தின் அடிப்படையில் பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. பணிக்கொடை ஒதுக்கீடு செய்யும்போது ஏற்பட்டுள்ள குறைபாடு சீராக்கம் | சட்டம் மற்றும் கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிர்காலத்தில் பணிக்கொடை ஒதுக்கும்போது மேற்கொள்ளப்படும் என. | |
| (ஆ) | திறைசேரி பொது தொழில்முயற்சி திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய PED 2021/01 ஆம் இலக்க செயல்பாட்டு கையேட்டில் 5.4 மற்றும் 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 04/22 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை. | ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில், 2023 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மற்றும் ஓர் ஊடக பிரச்சார நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒரு மேடை நாடகம் என்பன பொருட்டான பிரச்சார அனுசரணைக்காக ரூபா545,000 தொகை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் பொருளாதார ஸ்திரமின்மை நிலவிய காலப்பகுதியில், நாட்டில் இருந்த கடுமையான தொழிலாளர் சட்டங்கள் மற்றும் கடுமையான தொழிலாளர் கொள்கைகள் என்பன இலங்கைக்கு அந்நிய செலாவணியை கொண்டுவரும் முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வருகைதராமல் இருப்பதற்கு சில தடைகளாக விளங்கின. அங்கு அரசாங்கம் எடுத்த முடிவு யாதெனில், அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முதலீட்டு ஊக்குவிப்புகளை அதிகரிப்பதற்காக தளர்த்தப்பட்ட சில தொழிலாளர் சட்ட முறைமையொன்றை உருவாக்கிக் கொள்வதாகும். அதற்கு முன், ஒவ்வொரு வகுதியின் தொழிலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கருத்துக்களைப் பெறுவதன்மூலம் அவர்களை விழிப்பூட்டுவதற்காகவும் அமைச்சின் ஏனைய நிறுவனங்களுடன் சேர்ந்து இந்த பங்களிப்பு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதென. | சட்டதிட்ட ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவறான 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் ஸ்ரம வாசனா நிதியச் சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 3. உப பிரிவு 3 மற்றும்3 .4(2உ) உப பிரிவு | விதிகளை உருவாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, சபையானது அதன் கூட்டங்களின் நடைமுறை மற்றும் கூட்டங்களில் செயலாற்றும் விதத்தை முறைமைப்படுத்திக் கொள்ளுதல் தொடர்பான விதிகளை உருவாக்குவதற்கு சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயசபை, நடுத்தீர்ப்பாளர் அல்லது தொழில் நீதிமன்றம் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முன் உள்ள வழக்கு நடவடிக்கைகளுக்காக சேவையிலுள்ளோர் சட்ட உதவியைப் பெறுவதற்காக நிதிசார் சலுகைகளை வழங்குவதற்கு வேளைக்கேற்ற உருவாக்குகின்ற விதிகளினால் சபையால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் பணத்தொகைக்கு உட்பட வேண்டியபோதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரம வாசனா நிதியமானது, 2020.08.09 ஆம் திகதி சனாதிபதியினால் வெளியிடப்பட்ட 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பிரகாரம் நிதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அக்காலப்பகுதியினுள் நிதி அமைச்சு, உரிய விதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பியது. சட்ட வரைஞர் திணைக்களம், வரிசை அமைச்சான நிதி அமைச்சுடன் 2024.04.09 ஆம் திகதி நடாத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானம் யாதெனில், ஸ்ரம வாசனா நிதியத்திற்கும் லொத்தர் சபைக்கும் இடையிலான உடன்படிக்கை தொடர்பில் பொருள்கோடலை பெறுவது பொருத்தமானது எனவும், அந்த பொருள்கோடல் கிடைத்த பின் உரிய விதிகள் மற்றும் உரிய திருத்தங்களை ஒன்றாக சேர்த்து அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதென. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (ii) | 13.1உப பிரிவு மற்றும் 13.2 (அ) உப பிரிவு | லொத்தர்களை நடத்துதல். நிதியமும் லொத்தர் சபையும் இணங்கக்கூடிய ஏதேனும் லொத்தர் எண்ணிக்கை மற்றும் ஏதேனும் லொத்தர் வகைகள் நிதியத்தின் சார்பாக ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட வேண்டியபோதிலும், தேசிய லொத்தர் சபையுடன் நிதியத்தால் அத்தகைய உடன்பாடு எட்டப்படவில்லை. | 2022.08.26 ஆம் திகதி லொத்தர் சபைக்கு அனுப்பப்பட்ட ஸ்ரம வாசனா நிதியத்திற்கும் லொத்தர் சபைக்கும் இடையிலான உத்தேச லொத்தர் உடன்படிக்கை பொருட்டு உடன்படுதல் மற்றும் உடன்படாமை அடங்கலாக தயாரிக்கப்பட்ட கடிதம் 2022.10.10 ஆம் திகதி லொத்தர் சபையினால் ஸ்ரம | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் உடன்பாட்டுக்கு வருதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதியத்துக்கும் லொத்தர் சபைக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கைக்கு ஏனைய விடயங்களுடன்,<br>• லொத்தர்களில் வழங்கப்படும் பரிசுகள் பற்றி,<br>• அந்த லொத்தர்களில் கோரப்படாத பரிசுகள் பற்றி,<br>• லொத்தர்களின் வருமானத்தில் இருந்து நிதியத்துக்கு ஒதுக்கப்படும் பணத்தின் அளவு தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டியபோதிலும், நிதியமானது தேசிய லொத்தர் சபையுடன் அத்தகைய உடன்பாடுகள் எட்டப்படவில்லை. | வாசனா நிதியத்துக்கு அனுப்பப்பட்டது. அது பணிப்பாளர் சபைக்கும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கும் அனுப்பப்பட்டு கலந்துரையாடப்பட்டது. இந்த கடிதம் போதுமானது என்று பணிப்பாளர் சபை முடிவு செய்தது என. | |
| (iii) | 14.1 உப பிரிவு | விதி உருவாக்குதல் - சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை செயற்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் மீது பாதிக்கும் அல்லது அதற்கு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான விடயங்கள் சம்பந்தமாக அவசியம் என சபை கருதுகின்ற விதிகள் அல்லது இந்தச் சட்டத்தினால் விதிகளை உருவாக்கும்போது தத்துவம் அளிக்கப்பட்ட அல்லது விதிகளை உருவாக்குவது அவசியம் என கருதுகின்ற விடயங்கள் பொருட்டான விதிகளை சபையினால் உருவாக்க முடியுமான போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024.04.09 ஆம் திகதி நிதி அமைச்சுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானம் யாதெனில், ஸ்ரம வாசனா நிதியத்திற்கும் லொத்தர் சபைக்கும் இடையிலான உடன்படிக்கை தொடர்பில் பொருள்கோடலை பெறுவது பொருத்தமானது எனவும் அந்த பொருள்கோடல் கிடைத்த பின் உரிய விதிகள் மற்றும் உரிய திருத்தங்களை ஒன்றாக சேர்த்து அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 35,157,333 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 12,927,981 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 22,229,352 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முதலீட்டு வருமான அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி இருந்த போதிலும், அதற்குத் தேவையான அலுவலர் இல்லாத காரணத்தால் உள்ளக கணக்காய்வு பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2023.11.29ஆம் திகதி ஓய்வூதியத் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது கணக்காய்வு நடவடிக்கையை மேற்கொள்ளும்போது நிறுவனத்தின் கோப்புக்களை அந்த திணைக்களத்திற்கு எடுத்துச்சென்று கணக்காய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உட்பட்டு இருப்பதன் காரணமாக, அது நிறுவனத்தின் கோப்புக்களின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால் அவ்விடயத்துக்கு உட்பட்டு நியமனம் வழங்க முடியாது எனவும், வேறு நியமனமொன்றை வழங்குமாறும் பணிப்பாளர் சபையினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதன்படி, 2024.03.14ஆம் திகதிய கடிதத்தின் மூலம், அமைச்சின் அல்லது அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் பொருத்தமான அலுவலர் ஒருவரை நியமித்து அனுப்புமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதென. | உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஸ்ரம வாசனா நிதியத்தின் கருத்திட்டங்களுக்குத் தேவையான பாடசாலை பைகள் மற்றும் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா3,599,679 | ஸ்ரம வாசனா நிதியத்தின் குறைந்த பதவியினர்களின் கீழ் பாடசாலை உபகரணங்களை புத்தகப் பைகளில் பொதிசெய்யும் வேலையை செய்துகொள்ளுதல் எமது ஊழியர்களுக்கு சிரமமாக | உள்ளகக் கட்டுப்பாட்டினை பலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செலவிடப்பட்டிருந்ததுடன், பைகள் வழங்கும் நிறுவனத்தினாலேயே புத்தகங்களை பொதிசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டு எடுத்துச் செல்லல் 2023 திசெம்பர் மாதம் முதல் செயற்படுத்தப்பட்டதுடன், போதியளவு பதவியினர் இல்லாமையினால் உரிய உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை நிலவுவதாக அவதானிக்கப்படவில்லை.

இருந்தமையினால், ஸ்ரம வாசனா நிதியத்தின் பதவிநிலை அலுவலரின் மேற்பார்வையின் கீழ் பைகளை வழங்கும் நிறுவனத்திடம் ஒப்படைத்து அவர்களைக் கொண்டு பொதிசெய்யும் வேலை

மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், இந்தப் பைகளை விநியோகிப்பதற்கு முன், எழுமாற்றாக சில பைகள் மாதிரி, பைகளின் எண்ணிக்கை மற்றும் பைகளிலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை சரியானது என உறுதிப்படுத்தப்பட்டதன் பிற்பாடு விநியோகிக்கப்படுகின்றன என அத்துடன் தற்போது அது சரியான உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்படுகிறது என.